# Appreciation

காரைநகர் முத்தமிழ் பேரவை கடந்த 45 வருடகாலமாக கலைத்துறை வளர்சியில் அரிய பணியாற்றி வருகிறது. இந்தியாவில் பட்டம் பெற்ற அமரர் நடராசா அவர்களும் அவரது துணைவியாரும் பல்வேறு கலைஞர்களுடன் இருந்த தொடர்பும் இத்துறை சார்ந்த ஆர்வம் காரணமாகவும் இப்பேரவையை எமது கிராமத்தில் ஆரம்பித்தனர்.

இப் பிரதேச மாணவர்களுக்கு இசை, நடனப் பயிற்சிகளை வழங்குவதுடன் வருடாந்தக் கலை விழாவையும் சிறப்பாக நடாத்தி வந்தனர். திரு.நடராசாவின் மறைவுக்குப் பின் அவரது துணைவியார் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலையில் திறந்த வெளிக்கலை அரங்கினை அமைத்துக் கொடுத்தார்.

இடப்பெயர்வின் பின் மீளக் குடியமர்ந்த போது தனது தள்ளாத வயதிலும் இங்கு வந்து பேரவையின் சேவையை மேலும் வலுவுடன் திருமதி இராசமலர் - நடராசா அவர்கள் தொடர்வது வரவேற்கத்தக்கதாகும். இசை, நடன வகுப்புக்களுடன் பண்ணிசை, வயலின், மிருதங்கம் போன்ற பயிற்சிகளை நடாத்துவதுடன் பாலாவோடை அம்மன் கோவில் திக்கரை முருகன் கோவில், மணற்காடு முத்தமாரி அம்மன் கோவில் நிகழ்வுகளிலும் பிள்ளைகளின் நிகழ்ச்சிகளை அரங்கேற்றிப் பலரது பாராட்டுக்ளைப் பெற்றுள்ளார்.

இவ்வருடக் கலை விழா 1.11.2015 அன்று நடராசா கலையரங்கில் பி.ப 3.30 – 5.30 வரை சிறப்பாக நடைபெற்றது. மாணவர்களின் இயல், இசை, நடன நிகழ்வுகள் தூய்மையாக இருந்தமை சிறப்பம்சமாகும். மாணவர்களின் நடன நிகழ்விற்கு பேரவையின் இசை ஆசிரியர் பாட, நடன ஆசிரியர் நட்டுவாங்கம் செய்தார். மிருதங்க, வயலின் வித்துவான்கள் சிறப்பான அணிசெய் கலைஞர்களாகத் தொழிற்பட்டனர். மாணவர்களின் அங்க அசைவுகள், முகபாவனை, அபிநயம் பிரமாதம். மூன்று மாணவர்கள் வயலின் இசையில் அவர்களின் வயதுக்கு மிஞ்சிய ஆற்றலை வெளிப்படுத்தினர்.

முத்தமிழ்ப் பேரவையின் “பொம்மைக்கும் பொம்மைக்கும் கல்யாணம்” என்ற தனித்துவம் மிக்க இசை நடன நிகழ்வு பார்வையாளரைச் சிரிக்க வைத்ததுடன் குழந்தைகளின் திறமையைப் பாராட்டவும் வைத்தது.

இவ்வாறு சிறப்பான சேவை புரியும் முத்தமிழ்ப் பேரவைக்கு நிதிப் பங்களிப்பு வழங்கி அவர்களை மேலும் உற்சாகப்படுத்துவது எமது புலம் பெயர் அமைப்புக்களின் பொறுப்புமாகும்.

ப.விக்னேஸ்வரன்

தலைவர், காரை அபிவிருத்திச்சபை.